

30-12-1987 ரூ. 1

தமிழரசு



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோருடன்
அமரர் எம்.ஜி.ஆர்



# மறைந்த முதல்வர் அமரர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கு 'தமிழரசு' அஞ்சலி




**தமிழரசு**

திருவள்ளுவர் ஆண்டு 2018

பிரபவ - மார்கழி 15

மலர் : 18 இதழ் : 13

30-12-1987



முதல்வராகப் பதவி ஏற்பு (30.6.1977)



இரண்டாவது முறையாக முதல்வராகப் பதவியேற்பு (9.6.1980)

மூன்றாவது முறையாக முதல்வராகப் பதவியேற்பு (10.2.1985)





அறிஞர் அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி

30-6-1977 பதவி ஏற்றபின் அண்ணா சிலை முன் மக்களைச் சந்தித்தல்





காவல்துறை அணிவகுப்பைப் பார்வையிடுதல்

நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய வரும் நிதி அமைச்சருடன்.





திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களுடன்



திரு ஜெயில்சிங் அவர்களுடன்

# குடியரசுத் தலைவர்களுடன்...

திரு நீலம் சஞ்சீவரெட்டி அவர்களுடன்



திரு வி.வி. கிரி அவர்களுடன்





திரு ராஜீவ்காந்தி அவர்களுடன்

திருமதி இந்திராகாந்தி அவர்களுடன்



# பிரதமர்களுடன்...

திரு மொரார்ஜி தேசாய் அவர்களுடன்





திரு சரண்சிங் அவர்களுடன்



# Dr. M. G. RAMACHANDRAN

## CHIEF MINISTER OF TAMIL NADU

## A BIOGRAPHICAL SKETCH

DR. M. G. RAMACHANDRAN, Chief Minister of Tamil Nadu, India, is one of the most beloved humanists of the country. Dr. M.G. Ramachandran, endearingly known as M.G.R. was born on 17-1-1917 at Kandy in Sri Lanka where his father was a Magistrate. M.G.R's family came to Tamil Nadu and settled in Kumbakonam. After his father's death, M.G.R. could not pursue his education beyond the primary stage. He joined a drama troupe to support the family.

His mother wielded a great influence in shaping his character and, even while young, he began to foster the qualities of being humane and to resist tendencies that degraded human beings. He staunchly believed that sincere service to the poor is the gateway to the kingdom of God.

After gaining considerable experience on the stage, M.G.R. struggled hard to enter the cinema world. That was not easy. By his persistent efforts and endurance he slowly rose to positions. From 1947 he began to play principal roles as hero. One by one his films became box office hits.

He was of the firm opinion that the film media should be utilised for propagating good ideals. His film 'Malaikallan' in 1954 won him national acclaim. He produced and directed his own film 'Nadodi Mannan' (1958) which was regarded as 'movie magnum' and broke all previous records. Till he became Chief Minister of Tamil Nadu, he had acted in 132 films. He was an actor par excellence, a great director and producer. He knew each and every aspect of film making. Through the medium of cinema he preached virtues that make man a good human being. In the year 1972, he got the 'Bharat' award.

From his early years he had been a keen observer of public affairs. He was a staunch nationalist and a progressive thinker. He was a very good reader and conversationalist. He came into contact with the great leader Annadurai popularly called "Anna". He joined D.M.K in 1953. M.G.R. proved to be a great crowd puller and vote catcher for D.M.K. Anna had a special place for M.G.R. in his heart. M.G.R's popularity was mainly instrumental for the D.M.K taking hold of the Madras Municipal Corporation in the year 1959. From then on there was no looking back and M.G.R. led D.M.K. from victory to victory. He himself became a Legislator by entering the Madras Legislative Council in the year 1962.

In the year 1967, in the middle of election campaign, M.G.R. was shot at by rival actor M.R. Radha and M.G.R. was hospitalised. He contested the election lying in the hospital and he won by a huge margin. He needed no canvassing.

During the Chinese aggression in 1962, he as the first donor, donated Rs. 75,000 to war fund and at the time of Bangladesh war he actively campaigned for Defence efforts.

After the demise of Anna in 1969, M.G.R. backed M. Karunanidhi and Karunanidhi became the Chief Minister with the support provided by M.G.R. After the massive victory in 1971 elections, the ways of the party leadership began to be resented by the ranks as also by the public. Difference of opinion crept in between M. Karunanidhi and Dr. M.G.R. M.G.R.'s efforts to set things right in the D.M.K. party went futile. Instead of mending his ways, Thiru Karunanidhi expelled M.G.R. from D.M.K., then the treasurer of the party.

With enormous public support, M.G.R. founded the All India Anna D.M.K. on 17.10.1972. His party won all the bye-elections held between 1972-1976. The D.M.K. Ministry was dismissed in 1976.

The A.I.A.D.M.K. was voted to power in 1977 and again in 1980. M.G.R. as the Chief Minister started making plans to fulfil his promises which were mainly aimed at the uplift of the poor. He ordered reservation of 50% of seats in educational institutions and in Government employment for the backward communities. He launched many social welfare schemes for the hapless women, Child Welfare Schemes, Self-sufficiency scheme for the rural communities, the scheme of "One job per family" for the weaker sections and the schemes of paying "Unemployment allowance" for the educated unemployed youth.

The Chief Minister's Nutritious Noon Meal Programme has been acclaimed as a wise investment in human resources development. It is essential for national development. The programme has created a very favourable climate for education, health, growth and overall well-being of the children who are the future citizens of the country. It is a tribute to the human values, the Chief Minister possessed and practised.

Recently he introduced a scheme for supplying Footwear to children and poor working mothers, distribution of uniforms and text books to school children free of cost. He also introduced "Life oriented education" in schools from 1984. A massive programme is being launched to provide 30 lakh houses to economically weaker sections.

He has been instrumental for the rapid growth of higher education in Tamil Nadu by formation of new universities including one for women and another for Tamil language. The University for Tamil and the Women's University are the first of their kind in the whole of India. He has also been instrumental for opening of a number of polytechnics, medical colleges and engineering colleges.

He successfully conducted the Fifth World Tamil Conference at the ancient city of Madurai. which had been the seat of the Third Tamil Sangam. He had travelled extensively and had visited countries such as Sri Lanka, Burma, Singapore, Japan, Hongkong, France, Mexico and USA. He had a sharp and deep understanding of men and matters. Above all, he maintained a very cordial relation with Union Government. Being a leader committed to National Integration and Secularism, he led Tamil Nadu State as a model to others in maintaining communal harmony.

By reason of his eminent position and attainments, his incessant fight against evils in society, his abundant philanthropy, artistic intensity, creative energy, freshness of style, the lyrical force with which he communicated with the masses, and his inspiring devotion to an authentic moral humanism, he was awarded the Degree of Doctor of Laws (Honoris causa) by the University of Madras.

In the General Elections held during December 1984, A.I.A.D.M.K. secured massive victory for the third time. Dr. M.G.R. was elected as a Member of the Assembly even as he was taking treatment in Brooklyn Hospital, U.S.A. He assumed office as Chief Minister of Tamil Nadu for the third time, on his return from U.S.A on the 10th of February, 1985. The people of Tamil Nadu had unshakable faith in him as would be evident from the fact that he was elected and assumed office of the Chief Minister of Tamil Nadu for three times successfully.

**This great Charismatic leader and beloved Chief Minister Dr. M. G. R. passed away at 3 a.m. on 24th December 1987 at his residence at the M.G.R. Garden, Ramapuram, Madras.**



திரு நரசிம்மராவ் அவர்களுடன்

திரு என்.டி. திவாரி அவர்களுடன்



# மத்திய அமைச்சர்களுடன்...



திரு வசந்த் சாத்தே அவர்களுடன்



திரு பூட்டாசிங் அவர்களுடன்

திரு சவான் அவர்களுடன்





கருநாடக முதல்வர்
திரு ஹெக்டே
அவர்களுடன்



ஆந்திர முதல்வர்
திரு என்.டி. ராமாராவ்
அவர்களுடன்

# மாநில முதல்வர்களுடன்...



காஷ்மீர் முதல்வர்
திரு பரூக் அப்துல்லா
அவர்களுடன்



மேற்கு வங்க முதல்வர்
திரு ஜோதிபாஸு
அவர்களுடன்



நெதர்லாந்து தூதர் திருமதி இ.எம்.ஸ்கூ அவர்கள் சந்திப்பு (18.11.1987)



இங்கிலாந்து இளவரசர் திரு சார்லஸ் அவர்களுடன் (3.12.1980)

டாக்டர் பிரீட்மென் சென்னை வந்தபோது, அவருக்கு அர்த்தநாரீசுவரர். சிலையைப் பரிசாக அளித்தல் (17.3.1985)



ஜப்பான் டாக்டர் காணு அவர்களுடன் (12-12-1986)





கல்பாக்கம் அணுமின் நிலையம் தொடக்க விழா

தலைமைச் செயலகத்தில் புதிதாக நிறுவப்பட்ட கம்ப்யூட்டர் நிலையத்தைத் துவக்கி வைத்தல் (27.1.1987)





கிருஷ்ணா நதிநீர்த் திட்டத் துவக்க விழா (25.5.1983)

'மெட்ராஸ் கார்டன்ஸ்' சுற்றுலா மற்றும் உல்லாச வளாகத்திற்கு அடிக்கல் நாட்டு விழாவில் (16.7.1987)





கொடைக்கானலில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத் தொடக்கவிழா (2.3.1984)

குழந்தைகள் திரைப்பட விழாவைத் தொடங்கி வைத்தல் (1979)





நேருசிலை திறப்பு விழா (21.12.1987)



புதுடெல்லியில் மகாகவி சுப்பிரமணிய பாரதி சிலை திறப்பு விழா (4.2.1987)



இந்திய-இலங்கை ஒப்பந்தப் பாராட்டு விழா(2.8.1987)





முதல்வர் அவர்களின் மருத்துவச் செலவுக்காக தமிழக அரசு செலவிட்ட ரூ. 96 இலட்சத்திற்கான காசோலையினை 30.6.'85 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் வழங்கினார்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத் தொடக்க விழா (15.9.1981)





சட்டப்பேரவைத் தலைவர் திரு பி. எச். பாண்டியன் அவர்களுடன்

கோ-ஆப்டெக்ஸ் பொன் விழா (2-9-1985)







மதுரையில்
உலகத் தமிழ்ச்சங்கம்
தொடக்கம்.
(14.4.1986)





தமிழ்ப் பல்கலைக் கழக நூலகத் தொடக்கம் (14.4.1987)



குன்றக்குடி அடிகளாருக்குத் திருவள்ளுவர் விருது (15.1.1986)



பன்மொழிப் புலவர் திரு கா. அப்பாத்துரை அவர்களுக்கு திரு.வி. க. விருது வழங்குதல். (16.1.1984)

'அறிஞர் அண்ணா விருது' பெற்றபோது (15.9.1985)



எழுத்தாளர் கோவி. மணிசேகரனுக்கு ராஜராஜன் விருது வழங்குதல்





தியாகராய நகரில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் திருவுருவச் சிலை திறப்பு விழா (14.1.1969)



ஒலிம்பிக் வீரர் பாஸ்கரன் சிறப்பிக்கப்படுகிறார்.

இந்திய விண்வெளி வீரர்கள் ராகேஷ்சர்மா, மல்ஹோத்ரா ஆகியோருக்கு நடைபெற்ற பாராட்டு விழா (4.6.1984)





போப்ஆண்டவர் அவர்களுக்கு நினைவுப்பரிசு வழங்குதல் (5-2-1986)





திருவரங்கம் ராஜகோபுரம் குடமுழுக்குத் திருவிழா (25.3.1987)



முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்
செயலாக்கம்





இலவசப் பாடநூல் வழங்கும் திட்டம் தொடக்கம்
(13.6,1985)

காவல் துறையினருக்கு விருது வழங்குதல்






பெரியார் மாவட்டம் தொடக்கம் (24.9.1979)






காமராஜர் மாவட்டம் தொடக்கம் (15.7.1984)

இராமநாதபுரம் மாவட்டம் தொடக்கம் (16.7.84)








பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் தொடக்கம்
(17.7.1984)



அண்ணா மாவட்டம் தொடக்கம். (15.9.1985)

சிதம்பரனார் மாவட்டம் தொடக்கம். (19.10.1986)





மனித குலத்துக்குச் செய்த தொண்டுகளை முன்னிட்டு சென்னைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் வழங்குதல்.

(20.9·1983)



40 நாட்கள் மேற்கொண்ட அயல்நாட்டுப் பயணம் முடிந்து சென்னை திரும்பியதும் பேரறிஞர் அண்ணா உருவச்சிலைக்கு மாலை அணிவித்தல் (9.12'1978)



திரு ஆர்.எம்.வீ. பாராட்டு விழாவில்

மேட்டூர் அனல் மின் நிலைய விழாவில்





கலை உலகினர் அளித்த பாராட்டு விழா (20-11-1983)



அண்ணா மாவட்ட தொடக்க விழாவில் செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப. நினைவுப்பரிசு பெறுகிறார்



குழந்தைகளுடன்...





மருத்துவமனையில்
சிகிச்சை பெறும்
வயதான அம்மையாருக்கு
ஆறுதல் கூறுதல்



பொது விருந்து
நிகழ்ச்சியில்



நலிந்த பிரிவினருக்கு
இஸ்திரிப் பெட்டிகள் வழங்குதல்



தஞ்சையில் நடைபெற்ற ராஜராஜன் 1000வது முடிசூட்டு விழா. (16.9.1984)

நிரந்தரப் பொருட்காட்சிக்கு அடிக்கல் நாட்டு விழா





ஏழை முஸ்லீம் மற்றும் விதவைப் பெண்களுக்கு இலவசமாகப் புத்தாடைகளை வழங்குதல்.

வெள்ளப் பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்பார்வையிடுதல்





திரு எஸ். எல். குரானா அவர்களுடன்

திரு பட்வாரி
அவர்களுடன்



# ஆளுநர்களுடன்...

திரு சாதிக்அலி அவர்களுடன்





மூதறிஞர் இராஜாஜி அவர்களுடன்



பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடன்

பெரியவர் பக்தவத்சலம் அவர்களுடன்



# முன்னாள் முதல்வர்களுடன்...

கலைஞர் மு. கருணாநிதி அவர்களுடன்



# டாக்டர் எம். ஜி. ஆர். பெற்ற சிறப்பு விருதுகள்



மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி ஆர். அவர்கள் தம் வாழ்நாளில் பல்வேறு சிறப்பு விருதுகளைப் பெற்றவர். அவர் ஆற்றிய அருந் தொண்டினைப் பாராட்டிப் பல்வேறு சந்தர்ப்பங் களில் பலர் அவருக்கு விருதளித்துப் புகழ்மாலை சூட்டினார்கள். அதன் விவரம் வருமாறு:

மத்திய அரசின் ''பாரத்'' பட்டம்

சென்னைப் பல்கலைக் கழகத்தின் ''டாக்டர்'' பட்டம் (1983).

''பொன்மனச் செம்மல்''

''புரட்சி நடிகர்''

''மக்கள் திலகம்''

''புரட்சித் தலைவர்''

''மக்கள் கலைஞர்''

''கலை வேந்தன்''

''இதயக்கனி''

''நிருத்திய சக்கரவர்த்தி''

''மக்கள் நடிகர்''

## ''அவரது டாக்டர் என்று கூறிக்கொள்வதில் பெருமிதம் அடைகிறேன்!''

## -டாக்டர் ப்ரீட்மென்

மன வலிமை கொண்ட ஒரு நபர் எவ்வாறு தனது உடல் நலிவுகளைச் சமாளிக்க முடியும் என்பதற்கு மறைந்த முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன் ஒரு எடுத்துக்காட்டாக உள்ளார்.

''எம்.ஜி.ராமச்சந்திரன் அசாதாரண தைரியம் கொண்டவரா்க வும், நோயாளிகள் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு சிறந்த உதாரணமாகவும் இருந்தார்.

''எழுபது வயதிலும் கூட உடல் நலிவு ஏதும் இல்லாதவர் போல அலுவலகப் பணியை அவர் தொடர்ந்து மேற்கொண்டார். அவரிடமிருந்து நாங்கள் நிறைபக் கற்றுக் கொண்டோம். அவரது டாக்டர் என்று கூறிக்கொள்வதில் மிகவும் பெருமிதம் அடைகிறேன்''.

இவ்வாறு டாக்டர் எலி ப்ரீட்மென் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## டெல்லியில் இருந்து வந்த பீரங்கி வண்டி !

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் இறுதி ஊர்வலத்தில், அவரது பூத உடலைச் சுமந்து சென்ற பீரங்கி வண்டி, புது டெல்லியில் இருந்து அவசரமாக விமானம் மூலம் சென்னைக்குக் கொண்டு வரப் பட்டதாகும். முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்கள் மறைந்தபோது அவரது இறுதிப் பயணத்தில் பயன்படுத்தப் பட்டது இதே பீரங்கி வண்டிதான் என்பது குறிப்பிடத்தக்கது.

©
GOVERNMENT OF TAMIL NADU
1987

[Registered No. M-1

[Price : 15 Paise

# TAMIL NADU GOVERNMENT GAZETTE
## EXTRAORDINARY PUBLISHED BY AUTHORITY

No. 770] MADRAS, THURSDAY, DECEMBER 24, 1987
MARGAZHI 9, PRABHAVA, THIRUVALLUVAR AANDU—2018

## PART II—SECTION 2

## NOTIFICATIONS BY GOVERNMENT

### PUBLIC DEPARTMENT

(Special)

### DEMISE OF Dr. M. G. RAMACHANDRAN, CHIEF MINISTER OF TAMIL NADU

[*G.O. Ms. No.* 2095, *Public (Special-B), 24th December* 1987.]

No. II (2)|PUSP|7798(a)|87.

The Government of Tamil Nadu announce with the most profound regret the death of Dr. M. G. RAMACHANDRAN, Chief Minister of Tamil Nadu at 03.00 hours on Thursday, the 24th December 1987. State mourning will be observed for seven days from 24th December 1987 during which period the flags on all Government Buildings will be flown at half-mast. No official entertainment will also be held during this period.

(By order of the Governor)

A. PADMANABAN,
*Chief Secretary.*



PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU

# STATE FUNERAL
# OF THE
# Late Chief Minister
# Dr. M. G. RAMACHANDRAN
## 25th December 1987

The body of Late Chief Minister Dr. M. G. Ramachandran is lying in State from 9.00 a.m. on Thursday, the 24th December, 1987 at the RAJAJI HALL, Madras. The State funeral will commence at 1.00 p.m. on Friday, the 25th December, 1987 and the body will be buried at the Marina Beach opposite the University Buildings next to the Anna Samadhi.

Before the cortege leaves the RAJAJI HALL, all the wreaths will be placed between 11 a.m. and 12 noon. Wreaths will be placed on behalf of the President of India, Vice-President of India, Prime Minister of India, the Governor, Chief Minister and other dignitaries. Wreaths will also be placed by the principal mourners, close relatives of the Chief Minister, Speaker of the Legislative Assembly, Chief Justice, Ministers, Judges of the High Court, Members of Parliament, Members of Legislative Assembly, Chief Secretary to Government, the Army, Navy, Air Force representatives, Special Commissioners, Commissioners and Secretaries, Additional Secretaries to Government and other officials. Wreaths will also be placed by the members of the Consular Corps.

At 1.00 p.m. the pall bearers will bring out the body draped in the National Flag and place it on the Carriage. The firing party will present arms, when Officers in uniform will salute. As the body is placed on the Carriage, the firing party will reverse arms.

The cortege, followed by the principal mourners and others, will leave the RAJAJI HALL and proceed along the route. The route will be lined by troops/police. The procession will move in slow time upto the place of burial, the bands and drums playing the dead march at the beginning and the end. On arrival at the place of burial, the pall bearers will lift the body from the carriage and take it to the place of burial.

As the body is being lowered into the grave, three volleys of small arms will be fired and the buglers will sound the last post/Rouse.

## Disposition of the burial site





# காலத்தை வென்றவரின் கடைசி ஊர்வலம்

**கோ**டிக்கணக்கான தமிழ் உள்ளங்களில் கோலோச்சியவரும் நாட்டுத் தலைவர்களால் தேசியத் தலைவர்களில் ஒருவராகக் கொண்டாடப்பட்டவரும், ஏழை எளியமக்களின் இதய தெய்வமாக விளங்கியவரும், கலையுலகில் மகத்தான வரலாற்றைப் படைத்தவரும், பேரறிஞர் அண்ணா அவர்களின் இதயக் கனியாகத் திகழ்ந்தவரும், தமிழ் நாட்டில் பத்தாண்டுக்கு மேலாக முதலமைச்சர் பொறுப்பில் இருந்து அருந்தொண்டாற்றி வந்தவருமான மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் கடந்த 24-12-87 வியாழனன்று விடியற்காலை 3 மணி அளவில் அமரர் ஆனார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் மறைவெய்திய செய்தி நாடு முழுவதும் ஒரு பெரும் சோகத்தை உருவாக்கியது.

மத்திய அரசு, மறைந்த முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்



களுக்கு மரியாதை செய்யும் வகையில் 24-12-87 அன்று நாடு முழுவதும் துக்கநாள் கடைபிடித்தது. அன்று மத்திய அரசு அலுவலகங்களுக்கு இந்தியா முழுவதும் விடுமுறை விடப்பட்டது.

தமிழ்நாட்டில் 24-12-87முதல் ஒருவார காலம் துக்கம் அனுசரிக்கும் என்று தமிழ்நாடு அரசு அறிவித்தது.

மறைந்த முதல்வர் அவர்களின் பூத உடல் சென்னை ராஜாஜி மண்டபத்தில், பொதுமக்கள் பார்வைக்காக காலை 8.45 மணிக்கு எடுத்து வரப்பட்டது.

முதல்வரின் மறைவுச் செய்தி கேட்டுக் கதறிய வண்ணம் மக்கள் கடல் நான்கு புறங்களிலிருந்தும் சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள ராஜாஜி மண்டபத்தை நோக்கித் திரண்டது.

மறைந்த தலைவருக்குத் தங்கள் இறுதி அஞ்சலியைக் கூடியிருந்த மக்கள் செலுத்தினர்.

ஏழை எளிய மக்கள், தாய்க்







குலத்தினர், தங்களின் நம்பிக்கை நட்சத்திரமான தலைவர் மறைந்தது கண்டு அழுது புலம்பியது நெஞ்சை உருக்கியது.

மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் ஆர். வெங்கட்ராமன், மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி ஆகியோர் புது டில்லியிலிருந்து வந்து, மறைந்த தலைவருக்குத் தங்களுடைய இறுதி மரியாதையைச் செலுத்தினார்கள். ஆந்திர முதலமைச்சர் திரு என். டி. ராமாராவ்; கருநாடக முதலமைச்சர் திரு ராமகிருஷ்ண ஹெக்டே ஆகியோர் இறுதி மரியாதை செலுத்தினர்.

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

முதல்வரின் மறைவுச் செய்தி அறிந்ததும் தி.மு.க. தலைவர் கலைஞர் திரு மு. கருணாநிதி அதிகாலையில் ராமாவரம் தோட்டம் சென்று, மறைந்த முதல்வருக்கு மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்

24-12-87 இரவு முழுவதும் இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தியவண்ணமிருந்தனர். தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்களிலிருந்தும், அண்டை மாநிலங்களிலிருந்தும் வந்த மக்கள் அனைவரும் மகத்தான வரலாறு படைத்த தலைவருக்குத் தங்கள் அஞ்சலியைச் செலுத்தினர்.

25-12-87 காலையிலும் மக்கள் பெருங்கடல் தங்கள் தலைவனின் இறுதி தரிசனத்துக்காகக் காத்திருந்தது.

வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி வரை பொதுமக்கள் அமரர் எம். ஜி. ஆர். அவர்களின் பூதவுடலைத் தரிசித்தனர்.

சென்னையில் உள்ள கடற்படை அதிகாரி வைஸ் அட்மிரல் என்.சி. சோப்ரா, தரைப்படை மேஜர் ஜெனரல் நிர்மல் சோந்தி ஆகியோர் மலர் வளையம் வைத்தனர்.

பிற்பகல் 12.40 மணிக்கு 'கன் கேரியேஜ்' என்று சொல்லப்படும் பீரங்கி வண்டிமீது அமரர் எம். ஜி. ஆர். அவர்களின் பூதவுடல் வைக்கப்பட்டது. அந்த வாகனத்தின் முன் ராணுவ லாரி ஒன்றும் இணைக்கப்பட்டது.

குடியரசுத் தலைவர், பிரதமர் ஆகியோர் சார்பிலும் மத்திய அமைச்சர்கள் மலர்வளையம் வைத்தனர்.

மத்திய அரசு மனித வள மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு நரசிம்மராவ் ஆளுநர் திரு எஸ் எல்.குரானா. மத்திய அமைச்சர் திரு பூட்டா சிங், இணை அமைச்சர்கள் திரு. ப. சிதம்பரம், திரு அருணாசலம், துணை அமைச்சர் திரு பிரபு ஆகியோர் மலர் வளையம் வைத்தனர்.





சிறப்புக் காவல் படையினர் முன்னே சென்றனர். தொடர்ந்து காவல்துறை உயர் அதிகாரிகள் சென்றனர்.

இவை அனைத்துக்கும் முன்ன தாகச் சென்ற லாரியிலிருந்து சாலை நெடுகிலும் மலர்கள் தூவப்பட்டன.

ஏறத்தாழ 27 மணிநேரம் அமரர் எம்.ஜி.ஆர். அவர்களின் பூதவுடல் பொதுமக்கள் பார் வைக்கு வைக்கப்பட்டிருந்தது. பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தங்கள் தலைவனின் திரு முகத்தைத் தரிசித்தனர்.

இறுதி ஊர்வலம் பிற்பகல் 1.20 மணிக்குப் புறப்பட்டது.

ராஜாஜி மண்டபத்திலிருந்து அண்ணாசாலை, கதீட்ரல் ரோடு, டாக்டர் ராதாகிருஷ்ணன்சாலை, காமராஜ் சாலை வழியாக அண்ணாசதுக்கத்தின் தென் புறத்தை அடைய புறப்பட்ட இறுதி ஊர்வலம் மக்கள் வெள் ளத்தில் மிதந்து சென்றது. கண் ணுக்கு எட்டிய தொலைவுவரை மக்கள் தலைகளே தென்பட்டன.

சாலை எங்கும் மக்கள் கடல்!

உயர்ந்த கட்டடங்களில் உச்சி யில் எல்லாம் மனிதக் கூட்டம்.

விளம்பரப் பேனர்கள் வைக்கப் பட்டிருந்த இடங்களில் எல்லாம் உச்சியில் இருபதடி, இருபத் தைந்து அடி உயரத்துக்கு மேல் நின்றுகொண்டு ஊர்வலத் தைக் கண்டனர்.

மரங்களின் மேலேயும், வாக னங்கள் மீதும் நின்று கொண்டு தங்கள் அஞ்சலியைச் செலுத்தி னர்.

அமரர் எம்.ஜி.ஆர். அவர் களின் திருமுகத்தை இறுதியாக ஒருமுறை பார்த்துவிட வேண்டும் என்ற வேட்கையில் காலைமுதல் சாலையில் காத்திருந்த மக்கள் கைபிடிச் சுவர்கள் மீதும், மரக்கிளைகள் மீதும், பேருந்து நிழற் குடைகள் மீதும் நின்று கொண்டிருந்தனர்

காலத்தை வென்றவரின் கடைசி ஊர்வலம் அண்ணா சாலையில் குறிப்பிட்ட அளவு வேகமாகச் சென்றது என்றாலும் கதீட்ரல் சாலையிலும், டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையிலும் கடந்து செல்ல நீண்டநேரம் பிடித்தது. எங்கும் மக்கள் கூட் டம் நிரம்பி வழிந்தது.

கடற்கரைச் சாலை எங்கும் மக்கள் திரள். அவ்வழியே செல் லும் போது மேலும் மேலும் மக்கள் கூட்டம்!

வழிநெடுகிலும் திரண்டிருந்த மக்கள் கூட்டம் புதிய வரலாற் றைப் படைத்தது.





காலத்தை வென்று, காவிய மாகிய வெற்றித் திருமகனின் பூதவுடல் மாலை நான்கு மணிக்கு நல்லடக்கம் செய்ய அமைக்கப் பட்டிருந்த இடத்தை நோக்கி வந்தது.

இராணுவ இசைக் குழுவினர் சோக இசையை இசைத்துக் கொண்டு முன்செல்ல அமரர் எம்.ஜி.ஆர். உடலைத், தாங்கிய கவச வாகனம் தொடர்ந்தது.

அமரர் எம்.ஜி.ஆர். அவர் களின் பூதவுடலை அடக்கம் செய்வதற்காகச் சந்தனப்பேழை தயாராக வைக்கப்பட்டிருந்தது. சந்தனப் பேழையை உள்ளே இறக்கவும் கல்லறை அமைக்கப் பட்டிருந்தது.

பதினான்கு இராணுவ வீரர்கள் மூன்று முறை வானை நோக்கித் துப்பாக்கியை உயர்த் திச்சுட, சோக கீதம் இசைக்கப் பட்டு மறைந்த முதல்வருக்கு





அரசு மரியாதையும், இராணுவ மரியாதையும் செலுத்தப் பட்டன.



முன்னதாக குடியரசுத்தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், பிரதமர் ஆகியோர் சார்பிலும், தனது பொறுப்பிலும் மத்திய அமைச்சர் பூட்டாசிங் மலர் வளையம் வைத்தார்.

மத்திய அமைச்சர்கள் திரு நரசிம்மராவ், திரு பொடேடார், திரு.ப.சிதம்பரம், திரு அருணாசலம், திரு பிரபு ஆகியோரும் கேரள மாநில ஆளுநர் திரு.பா. ராமசந்திரன், ஆந்திர முதல்வர் திரு என்.டி.ராமாராவ், காஷ்மீர் முதல்வர் திரு பருக் அப்துல்லா ஆகியோர் மலர் வளையம் வைத்தனர்.

## வழிகாட்டி..



எம். ஜி. ஆர். தனது கடைசி மூச்சு உள்ளவரை இந்தியாவுக்கும், இந்தியாவின் அமைதிக்கும் பெரிய வழிகாட்டியாக இருந்தார்.

**—காஞ்சிப் பெரியவர்**
**திரு சந்திரசேகரேந்திர**
**சரசுவதி சுவாமிகள்.**

எம். ஜி. ஆர். மறைவைக் கேட்டுக் கிறிஸ்துவ சமுதாயம் அதிர்ச்சியிலும், ஆழ்ந்த துயரத்திலும் மூழ்கியுள்ளது.

**—திரு கசிமீர்ஞானாதிக்கம்,**
மயிலைப் பேராயர்
சென்னை.



முன்னாள் குடியரசுத் தலைவர் திரு நீலம் சஞ்சீவரெட்டி, தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா, மாநில அமைச்சர் பெருமக்கள், காவல்துறை உயர் அதிகாரிகள், மாநிலத்திலுள்ள முப்படைத் தளபதிகள் மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

சரியாக நான்கு நாற்பது மணிக்கு நல்லடக்கம் செய்யப் பட்டது.

கோடிக்கணக்கான தமிழ் மக்களின் உள்ளங்களில் கோலோச்சியவர் அண்ணா சதுக்கத்தின் தென் புறத்தில் மீளாத்துயில் கொண்டுள்ளார்.

இக்காட்சியைக் கண்ட இலட்சக் கணக்கானோர் தங்கள் கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினர்.

வாழ்க அமரர் எம்.ஜி.ஆர் புகழ்!



# பொன்மனச் செம்மலுக்குப் புகழஞ்சலி

## மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஆர். வேங்கட்ராமன்

"முதல்வர் எம். ஜி. ஆர். அவர்கள் காலமாகியது நாட்டுக்கே இழப்பாகும். நவீன இந்தியாவின் மிக அற்புத மனிதர்களில் ஒருவர் மறைந்துவிட்டார்.

''திரு எம். ஜி. ஆர். பொதுமக்கள் வாழ்க்கையுடன் ஒன்றிய கவர்ச்சிமிக்க தலைவர். மக்களுக்காக அவர் சிந்தித்து வாழ்ந்தார்.

''கலைத்துறையிலோ அல்லது அரசியல் துறையிலோ மக்களிடம் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு அதீத ஈடுபாடு இருந்தது. மக்களோ அவரிடம் மனப்பூர்வமான நம்பிக்கையும் அன்பும் வைத்திருந்தார்கள்.

''அவருடைய பத்தாண்டு ஆட்சிக்காலத்தில் முன்னோடியான க்ஷேமநலத் திட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அவற்றை மக்கள் ஆதரித்தார்கள். தமிழ்நாட்டு மக்களுக்காக அவர் தன் திறமையையும் நேரத்தையும் பயன்படுத்தினார். அதே சமயம், தேசியக் கண்ணோட்டத்தை அவர் இழக்கவில்லை. தேச ஒற்றுமை, தேச வலிமை பற்றி அவர் எப்பொழுதும் கருதி வந்தார்.''

## மேதகு இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் டாக்டர் சங்கர் தயாள் சர்மா

"ஏழை மக்களின் உண்மை ஊழியனாக எம். ஜி. ஆர். திகழ்ந்து வந்தார். தேசியக் கொள்கையில் தன்னை இணைத்துக்கொண்ட அவர், எதையும், எளிதில் புரிந்து கொள்ளும் ஒப்பற்ற தலைவராக விளங்கினார். இந்தியச் சரித்திரத்தில் அவர் புகழ் என்றும் நிலைத்து நிற்கும்.''

## மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி

"நட்புக்குச் சிறந்த இலக்கணமாகத் திகழ்ந்த ஒருவரை இழந்து நாடு துக்கத்தில் ஆழ்ந்துள்ளது. மறைந்த தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். எல்லாவற்றிற்கும் மேலாகச் சிறந்த தேசபக்தர்.

''எம்.ஜி.ஆர். இந்திய நாட்டின் ஐக்கியத்தைப் புனிதமாகக் கருதி, அதன் மேன்மை, சிறப்பு ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாப்பதைத் தனது புனிதக் கடமையாகக் கொண்டிருந்தார்.

''குறுகிய மனப்பான்மையை அறவே வெறுத்து வந்தார் அவர். இந்திய மக்கள் மட்டுமின்றி, இலங்கை மக்களும் அவரை நினைவில் வைத்திருப்பர். இலங்கைத் தமிழ் மக்கள் கவுரமாகவும், மரியாதையுடனும் வாழும் வகையில் அவர்களுக்குச் சம உரிமை பெற்றுத்தரும் போராட்டத்தில் தம்மை முழுவதுமாக ஈடுபடுத்திக் கொண்டார்.

''பிரச்சனைகளுக்கு வன்முறை மூலம் தீர்வு காணமுடியாது என்பதில் ஆழந்த நம்பிக்கை கொண்டவர். அதன்படி செயல்பட்டவர் அவர். நியாயமான உரிமைகளை அப்பாவிகளைக் கொல்வதன் மூலம் பெற முடியாது. காந்திஜி காட்டிய பாதை மூலம் தான் உரிமைகளைப் பெற வேண்டும் என்ற கருத்தையும் அழுத்தமாக வலியுறுத்தியவர் எம்.ஜி.ஆர்.

''என்னைப் பொறுத்தவரை எம்.ஜி.ஆர் அவர்களின் மறைவு மிகப் பெரிய இழப்பாகும். எம்.ஜி.ஆர். கலந்து கொண்ட கடைசி நிகழ்ச்சியான நேரு சிலைத் திறப்பு விழாவில் எனது குடும்பத்தின் மூன்று தலைமுறைகளுடன் அவர் கொண்டிருந்த தொடர்பை உருக்கமாகக் குறிப்பிட்டார். அந்த நிகழ்ச்சிக்குப் பின் 36 மணி நேரத்திற்குள் அவர் மறைந்துவிட்டார். அவரது பணி நிலைத்து நிற்கின்றன. திருமதி ஜானகி அம்மையார் மற்றும் தமிழக மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா

"தன்னிகரில்லா மக்கள் தலைவரை இழந்துவிட்டோம். பல அரிய குணங்களுக்குச் சொந்தக்காரராக அவர் திகழ்ந்தார். இதன் மூலம் மக்களின் மகோன்னதமான ஆதரவை அவர் பெற்றார்.

"என்னிடம் எப்போதும் கனிவுடனும், பாசத்துடனும் நடந்து கொண்ட முதல்வர் அவர். பரந்த உள்ளமும், தயாள குணமும் கொண்ட அவரைப் பொறுத்தவரையில், மாநிலத்தின் ஒட்டுமொத்த நலனே பிரதான நோக்கமாக இருந்து வந்தது.

"எம்.ஜி.ஆரின் பத்தாண்டு ஆட்சிக் காலத்தில், தமிழகம் சமூக, பொருளாதார மேம்பாட்டுத்துறைகளில் பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. மக்களின் மனப்போக்கை அறிந்து அதன்படி செயல்படும் சிறந்த அரசியல்வாதியாக அவர் திகழ்ந்தார்.

"சமுதாயத்தின் அடித்தளத்து மக்கள், ஏழை எளியவர்களைப் பற்றியே அவர் சிந்தனையிருந்தது. அவர்கள் வாழ்க்கையில் ஒளி விளக்கு ஏற்ற அவர் அரும்பாடுபட்டார்.

"இலங்கைத் தமிழர்கள் நலனுக்காக ஏற்பட்ட உடன்பாட்டுக்கு அவர் கொடுத்த முழு ஒத்துழைப்பு வரலாற்றுச்சிறப்பு வாய்ந்த ஒன்றாகும். எம்.ஜி.ஆர். மறைவின் மூலம் இந்தியத் திருநாடு ஒரு சிறந்த மகனை இழந்துவிட்டது.

"தமிழ் மக்கள் தாங்கள் மிகவும் நேசித்த ஒப்பற்ற தலைவர் ஒருவரை இழந்துவிட்டனர். தனிப்பட்ட முறையில் என்னைப் பொறுத்தவரையில் இது எனக்கு ஏற்பட்ட பேரிழப்பாகும்.

"எம்.ஜி.ஆர். விரும்பிய உன்னத இலட்சியங்கள் நிறைவேறப் பாடுபடுவதே அவருக்கு நாம் செலுத்தும் சிறந்த மரியாதையாகும்"

## மாண்புமிகு தமிழக இடைக்கால முதல்வர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

"நாட்டு மக்களின் இதயத்திலும் கழகத் தோழர்கள், கழக ஆதரவாளர்கள் இதயத்திலும் நீண்ட நெடுங்காலமாக நீக்கமற நிறைந்து இருந்து எல்லோருடைய அன்பையும், எல்லோருடைய பற்றையும் மிகச் சிறப்பாகப் பெற்று, எல்லோராலும் பாராட்டப்பட்டு, போற்றப்பட்டு-புகழப்பட்டு வந்தவர், தமிழக முதலமைச்சர், பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர் ஆவார்கள்.

"எல்லோரையும் திகைக்க வைக்கும்படி எதிர்பாராத வகையில் திடீரென்று மறைவு எய்தியது ஆற்றொணாத் துக்கத்தையும், துயரத்தையும் தருவதாகும்."

## மத்திய அமைச்சரவை அனுதாபம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைவுக்கு, மத்திய அமைச்சரவை கூடி அனுதாபம் தெரிவித்தது.

மாண்புமிகு மத்திய மனித ஆற்றல் சக்தி அமைச்சர் திரு பி.வி. நரசிம்மராவ் அவர்கள் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடந்தது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட அனுதாபத் தீர்மானத்தில், "தமிழகத்தின் எழுச்சிமிக்க தலைவராக நீண்டகாலம் விளங்கிய எம்.ஜி.ஆர். தமிழக மக்களை எப்போதும் தேசிய நீரோட்டப் பாதையில் அழைத்துச் சென்றார். அவரது மறைவால் நாட்டுக்கு, குறிப்பாக, தமிழகத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்பை நிரப்புவது கடினம்" என்று கூறப்பட்டுள்ளது.

## அமெரிக்க அரசு ஆழ்ந்த இரங்கல்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவுக்கு, அமெரிக்க அரசு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளது.

*"தமிழ்நாடு முதல்வர் எம்.ஜி. ராமச்சந்திரன் அவர்கள் மறைவுக்கு அமெரிக்க அரசு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது" என்று இரங்கல் செய்தியில் அமெரிக்க அரசு குறிப்பிட்டுள்ளது.*

## தமிழக அமைச்சரவை அஞ்சலி

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவுக்குத் தமிழக அமைச்சரவை அஞ்சலி செலுத்தியது. 24-12-87 அன்று காலை தலைமைச் செயலகத்தில் நடந்த இக் கூட்டத்திற்குத் தற்காலிக முதல்வர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைவுக்குக் கூட்டத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதுபற்றி அரசு அறிவிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:

"தமிழக அமைச்சரவை 24-12-87ஆம் தேதி தன்னுடைய முதல் கூட்டத்தில், தமிழக முதல்வராக 10 ஆண்டுக் காலத்துக்கு மேல் பதவி வகித்து அரும்பணியாற்றிப் புகழோடும், பெருமையோடும் தமிழக மக்களின் இதயத்தில் இடம் பெற்றிருந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்களது எதிர்பாராத அதிர்ச்சி தரும் திடீர் மறைவு குறித்து துக்கமும், துயரமும் கொள்வதோடு தமது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

"அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவரது அருமைத்துணைவியார் திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்களுக்குத் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது".

# அரசியல் கட்சித் தலைவர்கள் அஞ்சலி



தேசிய உணர்வுமிக்கவராகவும், தேசியக் கண்ணோட்டத்தோடு பிரச்சினைகளை அணுகிய தேசியத் தலைவராகவும் தம்முடைய வாழ்நாள் முழுவதும் எம்.ஜி.ஆர். இருந்தார்.

**—திரு ஜி. கே. மூப்பனார்,**
மூத்த பொதுச் செயலாளர்
அகில இந்திய காங்கிரஸ் கட்சி.

## சக்திவாய்ந்த அரசியல் தலைவர்!

**இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் 'லண்டன் டைம்ஸ்' என்னும் பத்திரிகை, மறைந்த முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவு குறித்து இரங்கல் செய்தி வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:**

**"இந்தியாவின் சக்தி வாய்ந்த அரசியல் தலைவராக எம்.ஜி.ஆர் திகழ்ந்தார். இலங்கை தமிழ்ப் பிரச்னையில் அவர் முக்கிய பங்கு வகித்தார். பிரதமர் ராஜீவ் காந்தியின் முக்கிய ஆதரவாளர் எம்.ஜி.ஆர்."**

தமிழக முதலமைச்சர் எனது இனிய நண்பர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவு கேட்டு அதிர்ச்சியும், பெரும் துன்பமும் தாக்கிய நிலையில் **இருக்கிறேன். என் சிந்தைக்கினிய நண்பர் செல்வாக்கு மிக்க முதலமைச்சர் குறுகிய காலத்தில் ஒரு கட்சியை உருவாக்கி, அதனை ஆளுங்கட்சியாக்கிய ஆற்றல் படைத்தவரின் இழப்புகேட்டு இந்த நாடே துயரத்தில் ஆழ்ந்திருக்கிறது.**

**— கலைஞர் மு. கருணாநிதி**
தலைவர்,
திராவிட முன்னேற்றக்கழகம்.

பெரியாரிடம் பேரன்பு கொண்ட மறைந்த முதல்வர் எம். ஜி. ஆர், மக்களால் உருவாக்கப்பட்டு, மக்களை மதித்து மக்களால் நேசிக்கப்பட்டு, மக்கள் தலைவராக இறுதி மூச்சு வரை திகழ்ந்தார்.

**—திரு கி. வீரமணி,**
பொதுச் செயலாளர்,
திராவிடக் கழகம்.

கடந்த பல்லாண்டுக்காலமாகப் பெரும் துன்பத்துக்கும் துயருக்கும் ஆளாகியிருந்த இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு அமைதியையும், உரிமைகளையும், மீட்டுத் தருவதற்கான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை உருவாக்குவதில் எம். ஜி. ஆர். ஆற்றிய பங்கு பெரும் பங்காகும்.

**— திரு ஏ. நல்லசிவன்,**
செயலாளர்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, (மார்க்சிஸ்ட்)

எம். ஜி. ஆரின் பெயர் ஏழை மக்கள் மத்தியில் நீண்டகாலம் நிலைத்து இருக்கும்.

**—திரு பி. மாணிக்கம்,**
மாநிலச் செயலர்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

எம். ஜி. ஆரின் மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பு.

**—திரு கோ. கலிவரதன்,**
பொதுச் செயலாளர்,
தமிழக ஜனதா கட்சி.

தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் காலமான செய்தி அனைவரையும் மீளாத் துயரில் ஆழ்த்தியுள்ளது.

**—திரு ப. நெடுமாறன்,**
தலைவர்,
தமிழ்நாடு காமராஜர் காங்கிரஸ்.

எம். ஜி. ஆர். மறைவு-குறிப்பாக, முஸ்லீம் மக்களுக்கு ஈடு **செய்ய முடியாத நஷ்டம்.** எம்.ஜி.ஆர். தமது பத்தாண்டுக் கால ஆட்சியில் ஏழை எளியவர்களுக்கும், சிறுபான்மையினருக்கும் பல நன்மைகளைச் செய்தவர்.

**—திரு ஏ.கே.ஏ. அப்துல்சமது,**
தமிழகத் தலைவர்
இந்திய யூனியன் முஸ்லீம் லீக்.

## மாண்புமிகு முதல்வர் கலந்துகொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி

**மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 21-12-87 திங்கட்கிழமையன்று சென்னை கிண்டி கத்திப்பாரா சந்திப்பில் நடைபெற்ற, பண்டித நேரு அவர்களின் திருவுருவச் சிலைத் திறப்பு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய நிகழ்ச்சியே அவர் கலந்து கொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சியாகும்.**

ஒரு சகாப்தம் முடிந்து இருக்கிறது. மத்திய - மாநில உறவுகள் இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக விளங்கிய சரித்திர நாயகர் எம்.ஜி.ஆர்.

**—திரு ஜெயமோகன்,** எம்.பி.
தலைவர்.
இளைஞர் காங்கிரஸ்.

மக்கள் திலகமாக வாழ்ந்த அவர், தமிழக அரசியல் மாற்றத்திற்கு வழிகண்ட புரட்சியாளராகத் திகழ்ந்தார்.

**—திரு வை. பாலசுந்தரம்,**
தலைவர்
அம்பேத்கார் மக்கள் இயக்கம்.



## தலைமைச் செயலகத்தில் அஞ்சலி

தலைமைச் செயலகத்தில் 28-12-87 அன்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு ஊழியர்கள், மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு அஞ்சலிசெலுத்தினர். மாண்புமிகு தற்காலிக முதலமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உரையாற்றினார். அப்போது தலைமைச் செயலர் திரு. ஏ. பத்மநாபன், இ.ஆ.ப. இரங்கல் தீர்மானத்தைப் படித்தார். அது வருமாறு:

"மாண்புமிகு தமிழக முதலமைச்சராய்த் திகழ்ந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. இராமச்சந்திரன் அவர்கள், 24-12-1987-ஆம் நாளன்று, விடியற்காலை, எதிர்பாராத வகையில், திடீரென்று அதிர்ச்சி தரும் முறையில், இயற்கை எய்தியது, நமக்கெல்லாம் ஆற்றொணாத் துக்கத்தையும், துயரத்தையும் அளிக்கின்றது. அவர்கள், சென்ற பத்தாண்டுக் காலத்திற்கு மேலாகத் தமிழக அரசின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, எல்லோருடைய அன்பையும், ஆதரவையும், நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்றுப் பெருமையோடும், புகழோடும் வாழ்ந்து வந்தார்கள். நாட்டில் வாழும் ஏழை-எளிய - நலிந்த-திக்கற்ற மக்கள், வாழ்க்கை வசதிகளையும், சமூக மேம்பாட்டு வாழ்வையும் பெற்று, வாழ்வதற்கான நல்வாழ்வுத் திட்டங்களையும், நாடு முன்னேற வளர்ச்சித் திட்டங்களையும் தீட்டி அவற்றை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்திய பெருமை அவருக்கு உண்டு. ஓங்கு புகழ் எய்திய மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களுக்கு அஞ்சலி செலுத்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இங்குக் கூடியுள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலக அலுவலர்கள் ஆகிய அனைவரும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது மறைவால் வருந்தும் திருமதி ஜானகி இராமச்சந்திரன் அவர்களுக்குத் தங்களது ஆழ்ந்த வருத்தத்தையும், பரிவையும் தெரிவித்துக் கொள்கிறார்கள்."





# மறைந்த முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் துணைவியார் நன்றி

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தும், துயரத்தில் பங்கு கொண்டும் ஆறுதல் கூறிய அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், பொது மக்களுக்கு, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் துணைவியார் திருமதி வி.என். ஜானகி இராமச்சந்திரன் அவர்கள் நன்றி தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

''எனது கணவர் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களை இழந்து தாங்க முடியாத துயரத்தில் கண்ணீர்க் கடலில் தவித்துக் கொண்டிருக்கிறேன்.

''நாட்டுக்கும், எனக்கும் இழப்பு ஏற்பட்டுள்ள இந்தச் சோகமான நிலையில் எனது துயரத்தில் பங்கு கொண்டு ஆறுதல் கூறிய குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன், குடியரசுத் துணைத் தலைவர் சங்கர்தயாள் சர்மா, பிரதமர் ராஜீவ் காந்தி, மாநில ஆளுநர்கள், மத்திய அமைச்சர்கள், ஆந்திரா, கர்நாடக, காஷ்மீர், புதுவை மாநில முதல்வர்கள், இதர அமைச்சர்களுக்கும், பல்வேறு அரசியல் தலைவர்கள், பிரமுகர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நேரில் வந்து தெரிவித்ததாகக் கருதிக் கொள்ளும்படி வேண்டுகிறேன்''

# மக்கள் திலகத்துக்கு மாநிலங்களில் துக்கம்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்களின் மறைவு குறித்து, இந்தியாவின் பல்வேறு மாநில அரசுகளும் துக்க நாளாகக் கடைப்பிடித்து விடுமுறை அறிவித்தது.

## கர்நாடகம்

கர்நாடக மாநில அரசு, வங்கிகள் உட்பட அனைத்து அரசு அலுவலகங்களுக்கும், பள்ளிகளுக்கும், விடுமுறை அறிவித்தது.

## கேரளம்

கேரள மாநில அரசு, எல்லா அரசு அலுவலகங்களுக்கும் விடுமுறை நாளாக அறிவித்தது.

## பாண்டிச்சேரி

பாண்டிச்சேரி மாநிலத்திலும் அரசு விடுமுறை விடப்பட்டது.

## ஆந்திரம்

ஆந்திர மாநில அரசும் விடுமுறை அறிவித்தது. திருப்பதியில் தேவஸ்தான அலுவலகமும், வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகமும் மூடப்பட்டன.

## காஷ்மீர்

காஷ்மீர் மாநிலத்திலும் அரசு விடுமுறை விடப்பட்டது. தேசியக் கொடிகளும் அரைக் கம்பத்தில் பறந்தன. அரசு விழாக்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன.

## கோவா-அரியானா

கோவா, அரியானா அரசுகளும் விடுமுறை அறிவித்தன.

## மத்தியப் பிரதேசம்

மத்தியப் பிரதேசத்தில் ஒரு நாள் துக்கம் கடைப்பிடிக்கப் பட்டு அரசு அலுவலகங்களுக்கு விடுமுறை விடப்பட்டது.

# இலங்கை அனுதாபம்

## இலங்கை ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனா

தமிழ்நாட்டு மக்களுக்கு எம். ஜி. ஆர். பல ஆண்டுகள் ஆற்றி இருக்கும் சேவை மறக்க முடியாதது. எம்.ஜி.ஆரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், தமிழ்நாடு அரசுக்கும், இந்திய அரசுக்கும், உங்களுக்கும் (திரு ராஜீவ் காந்தி அவர்களுக்கும்) என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் அரசாங்கமும் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

## இலங்கைப் பிரதமர் திரு பிரேமதாசா

வறுமையை ஒழிப்பதில்-எம்.ஜி ஆர். எடுத்துக் கொண்ட முயற்சிகளும், பசியைப் போக்கவும், நோயை விரட்டவும், அவர் காட்டிய தீவிரமும், தமிழ்நாட்டு மக்கள் நெஞ்சில் நீண்ட நாள் நிலைத்து நிற்கும்.

## இலங்கை கிராமத்தொழில் அமைச்சர் திரு தொண்டைமான்

எம். ஜி. ஆர். அவர்களின் மறைவு தமிழக மக்களுக்குமட்டு மன்று, உலகம் முழுவதும் உள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் பேரிழப்பாகும்.

## இலங்கை அறநிலையத் துறை அமைச்சர் திரு ராஜதுரை

இந்தியா-இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதில் எம். ஜி. ஆர். முக்கிய பங்கு கொண்டார். இலங்கையில் அமைதி ஏற்பட வேண்டும் என்பதற்காக அவர் இறுதி மூச்சுவரை பாடுபட்டார். இலங்கைத் தமிழ் மக்கள் எம்.ஜி.ஆரை மறக்கவே மாட்டார்கள்.

## எம்.ஜி.ஆர் பிறந்த ஊரில்

மாண்புமிகு முதல்வர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் பிறந்த ஊரான இலங்கை கண்டியில் உள்ள தமிழர்களும், இலங்கையின் மத்திய மலைப்பகுதியில் உள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தமிழ்த் தொழிலாளர்களும் வேலைக்குச் செல்லாமல் துக்கம் அனுசரித்தனர்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இரா. கற்பூரசுந்தரபாண்டியன், இ.ஆ.ப.,
இயக்குநர், தமிழ்நாடு அரசு, செய்தி - மக்கள் தொடர்புத்துறை, சென்னை.
அரசினர் தோட்டம், தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.



Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

